8ஆம் வகுப்பு -கணக்கு-தகவல் செயலாக்கம்-ஒரு மதிப்பெண் தேர்வு

ஆக்கம்: கோ.இளவரசு M.A.,M.Sc.,M.Phil.,B.Ed., B.T.Asst.,

1. பள்ளிகளுக்கிடையிலான வினாடிவினா போட்டிக்கு, பள்ளியின் சார்பாக ஒருவரைத் தேர்ந்தெடுக்க 26 மாணவர்கள் மற்றும் 15 மாணவிகளுக்கு ஆசிரியர் பயிற்சியளிக்கிறார் எனில், இவர்களிலிருந்து ஒருவரை ஆசிரியர் தேர்ந்தெடுக்க எத்தனை விதமான வாய்ப்புகள் உள்ளது ?

   (அ) 41 (ஆ) 26 (இ) 15 (ஈ) 390

2. மூன்று நாணயங்களை ஒரே சமயத்தில் சுண்டும்போது எத்தனை விதமான விளைவுகள் கிடைக்கும்?

   (அ) 6 (ஆ) 8 (இ) 3 (ஈ) 2

3. மூன்று பலவுள் தெரிவு (multiple choice questions) வினாக்களில் A, B, C மற்றும் D தெரிவுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்க எத்தனை விதமான வழிகள் உள்ளன ?

   (அ) 4 (ஆ) 3 (இ) 12 (ஈ) 64

4. 7 ஐ ஓர் இலக்கமாகக் கொண்ட ஈரிலக்க எண்கள் எத்தனை உள்ளன ?

   (அ) 10 (ஆ) 18 (இ) 19 (ஈ) 20

5. பதினோறாவது பிபனோசி எண் என்ன?

   (அ) 55 (ஆ) 77 (இ) 89 (ஈ) 144

6. F(n) என்பதில் $n = 8$ எனில், பின்வருவனவற்றுள் எது உண்மையாகும்?

   (அ) $F(8) = F(9) + F(10)$ (ஆ) $F(8) = F(7) + F(6)$

   (இ) $F(8) = F(10) \times F(9)$ (ஈ) $F(8) = F(7) - F(6)$

7. பிபனோசி எண்தொடரில் ஒவ்வொரு மூன்றாவது உறுப்பும் ___________ இன் மடங்கு ஆகும்.

   (அ) 2 (ஆ) 3 (இ) 5 (ஈ) 8

8. பிபனோசி எண்தொடரில் ஒவ்வொரு ___________ ஆவது உறுப்பும் 8இன் மடங்கு ஆகும்.

   (அ) 2 ஆவது (ஆ) 4 ஆவது (இ) 6 ஆவது (ஈ) 8 ஆவது

9. பதினெட்டாவது மற்றும் பதினேழாவது பிபனோசி எண்களுக்கிடையிலான வித்தியாசம் ___________ ஆகும்.

   (அ) 233 (ஆ) 377 (இ) 610 (ஈ) 987

10. 30 மற்றும் 250 இன் பொது பகாக் காரணிகள்_________ ஆகும்.

    (அ) $2 \times 5$ (ஆ) $3 \times 5$ (இ) $2 \times 3 \times 5$ (ஈ) $5 \times 5$

11. 36, 60 மற்றும் 72 இன் பொதுப் பகா காரணிகள் _________ ஆகும்.

    (அ) $2 \times 2$ (ஆ) $2 \times 3$ (இ) $3 \times 3$ (ஈ) $3 \times 2 \times 2$

12. இரண்டு எண்களின் மீப்பெரு பொதுக்காரணி_____ எனில் அவை சார் பகா எண்கள் எனப்படும்.

    (அ) 2 (ஆ) 3 (இ) 0 (ஈ) 1

LIVEWORKSHEETS

13. கொடுக்கப்பட்டுள்ள (i) மற்றும் (ii) கேள்விகளில் ஒவ்வொரு தொகுப்பிலும் நான்கு எழுத்துகள் உள்ளன. அவற்றில் மூன்று தொகுப்புகள் ஒரே மாதிரியாகவும், ஒன்று மட்டும் வேறுபட்டும் உள்ளது எனில், வேறுப்பட்ட ஒன்று எது எனக் காண்க.

(i) (அ) C R D T (ஆ) A P B Q (இ) E U F V (ஈ) G W H X

(ii) (அ) H K N Q (ஆ) I L O R (இ) J M P S (ஈ) A D G J

14. எழுத்துகளின் தொகுப்பு ஒன்று கீழேக் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு எழுத்துக்கும் தனித்தனியே எண் குறியீடு வழங்கப்பட்டுள்ளது. இத்தொகுப்பு எழுத்துகளை இடம்பெயர்த்து மாற்றியமைத்தால் பொருளுள்ள வார்த்தைக் கிடைக்கும். அதன்படி, புதிதாகக் கண்டுபிடித்த வார்த்தைக்கான எண்குறியீடுனைக் காண்க.

| L I N C P E |
|---|
| 1 2 3 4 5 6 |

(அ) 2 3 4 1 5 6 (ஆ) 5 6 3 4 2 1 (இ) 6 1 3 5 2 4 (ஈ) 4 2 1 3 5 6

15. கீழேக் கொடுக்கப்பட்டுள்ள (iii) மற்றும் (iv) கேள்விகள் ஒரு குறிப்பிட்ட குறியீடு மொழியைச் சார்ந்துள்ளது. கொடுக்கப்பட்ட நான்கு தேர்வுகளிலிருந்து சரியான ஒன்றைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.

(iii) ஒரு குறிப்பிட்ட குறியீடு மொழியில் , 'MEDICINE' என்ற வார்த்தை 'EOJDJEFM' என மாற்றிக் குறியீடு செய்யப்பட்டுள்ளது எனில் 'COMPUTER' என்ற வார்த்தைக்கான குறியீடு எது எனக் காண்க.

(iii) (அ) C N P R V U F Q (ஆ) C M N Q T U D R
(இ) R F U V Q N P C (ஈ) R N V F T U D Q

(iv) ஒரு குறிப்பிட்ட குறியீடு மொழியில் , 'P H O N E' என்ற வார்த்தை 'S K R Q H' என மாற்றிக் குறியீடுச் செய்யப்பட்டுள்ளது எனில் 'R A D I O' என்ற வார்த்தையை எவ்வாறு குறியீடு செய்யலாம்?

(iii) (அ) S C G N H (ஆ) V R G N G (இ) U D G L R (ஈ) S D H K Q

16. இணையம் அல்லது தொலைக்காட்சி விளம்பரங்கள் மூலம் வணிகர்கள் பொருள்களை வாங்க வைக்கக் கையாளும் யுக்திகள்

(அ) சிறப்பு இசையைப் பயன்படுத்துதல்

(ஆ) கவர்ச்சிகரமான படங்களைப் பயன்படுத்துதல்

(இ) இப்பொருள் நமக்குத் தேவை என்ற எண்ணத்தைத் தூண்டுவது

(ஈ) மேற்கூறிய அனைத்தும்

17. நான் பொருள்கள் வாங்க அங்காடிக்குச் சென்றால்,

(அ) கவர்ச்சிகரமானதாகத் தோன்றும் பொருள்களை வாங்குவேன்

(ஆ) எனது நண்பரிடம் இருக்கும் பொருள்களைப் போல வாங்குவேன்

(இ) நான் வாங்க வேண்டிய பொருள்களை வாங்குவேன்

(ஈ) நான் கடையில் முதலில் பார்க்கும் பொருள்களை வாங்குவேன்

18. சிறந்த முறையில் பொருள்களை வாங்குதல் என்பது

(அ) எப்போதும் சிறந்த பெயர் பெற்ற அங்காடிகளில் பொருள்களை வாங்குதல்

(ஆ) வாங்குவதற்கு முன் சில அங்காடிகளில் பொருள்களை ஒப்பிடுதல்

(இ) எனது நண்பர்கள் வாங்கிய பொருள்களைப் போல வாங்குதல்

(ஈ) எப்போதும் வாங்கும் ஒரு வழக்கமான கடையில் பொருள்களை வாங்குதல்

LIVEWORKSHEETS